# தர்மபுரி மாவட்டவளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம்

## கலெக்டர் கி.சாந்தி முன்னிலையில் நடந்தது



தர்மபுரி ,டிச.07-

தர்மபுரி மாவட்டவளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண் காணிப்பு குழு கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் சாந்தி முன்னிலை வகித்தார்.

மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு தலைவர் செந்தில்குமார் எம்.பி. கூட்டத்திற்கு தலைமை தாங்கி, மத்திய, மாநில அரசுகள் சார்பில் தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் குறித்து துறை அதிகாரி களிடம் கேட்டறிந்து, ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- தர்மபுரி மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் சார்பில் பொதுமக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த திட்டங்களை துறை அலுவலர்கள் அரசின் வழிகாட்டு நெறி முறைகளை முழுமையாக பின்பற்றி சிறப்பாக செயல்படுத்த வேண்டும். நிலம் அளவீடு பணி அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் ஏதாவது சிரமங்கள் இருந்தால் அதுகுறித்து உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். அப் போதுதான் அதற்குரிய தீர்வை கண்டறிந்து மக்கள் நல திட்டங்களை காலதாமதமின்றி விரைவாக நிறைவேற்ற முடியும். தர்மபுரி-மொரப்பூர் இடையே புதிய ரெயில் பாதை அமைப்பதற்கு நிலம் அளவீடு செய்யும் பணி நடை பெற்று வருகிறது. இந்த பணி களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விரைவாக முடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் கலெக்டர் தீபனா விஸ்வேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் அனிதா,கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராமதாஸ், மருத்துவ பணிகள் இணை இயக்குனர் சாந்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் மரியம் ரெஜினா ஊராட்சிகள் உதவி இயக்குநர் தாரத் குமார். வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் மாது, தர்மபுரி நகராட்சி ஆணையாளர் சித்ரா சுகுமார் பலர் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்: மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன் தலைமையில் நடந்தது



மொரப்பூர்,டிச.07-

தர்மபுரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மொரப்பூர் அருகே உள்ள தம்பி செட்டிபட்டி கிராமத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு திமுக மேற்கு மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன் தலைமை வகித்தார்.மாநில தீர்மான குழு செயலாளர் கீரை.எம. எஸ்.விஸ்வநாதன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் எஸ்.ராஜேந்திரன்,மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சத்தியமூர்த்தி,மாவட்ட துணை செயலாளர்கள் வக்கீல் ஆ. மணி, கிருஷ்ணகுமார்,ராஜகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தலைமை செயற்குழு உறுப்பினர் கே.சென்ன கிருஷ்ணன் வரவேற்று பேசினார்.செயற்குழு கூட்டத்தில் திமுக மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.பழனியப்பன் கலந்துகொண்டு தமிழக மக்களின் நலனுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்த கழக நிர்வாகிகள் பாடுப்பட வேண்டும். பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு விழா கொண்டாடுதல்,கழக வளர்ச்சிப் பணிகள்,பூத் கட்டிய அமைத்தல் உள்ளிட்டவைகளை போன்ற கருத்துக்கள் குறித்து சிறப்புரையாற்றினார்.அதனைத் தொடர்ந்து கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களின் நலனுக்காக செயல்படுத்தப் படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் தருமபுரி தொகுதியில் திமுக மகத்தான வெற்றி பெற பாடுப்பட வேண்டும்.

பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு விழாவை தர்மபுரி மேற்கு மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுவது என்ன தீர்மானிக்கப்பட்டது. தர்மபுரி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பூத்துகளிலும் பூத் கமிட்டி பொறுப்பாளர்களை நியமித்து அவர்கள் பணியாற்ற வேண்டிய வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் மேலும் கட்சியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல்,உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இக் கூட்டத்தில்

மாவட்ட பொருளாளர் எம்.எம். முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சித்தார்த்தன்,பி.சி.ஆர்.மனோகரன்

ஒன்றிய செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், இ.டி.டி. செங்கண்ணன், சந்திரமோகன், அரூர் பேரூராட்சி துணை தலைவர் சூர்யா தனபால்,பேரூராட்சித் தலைவர்கள்,பேரூராட்சி செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள்,கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.முடிவில் அரூர் ஒன்றிய செயலாளர் ஆர்.சௌந்தர்ராஜன் நன்றி கூறினார்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 19 அரசு - தனியார் பொறியியல் கல்லூரிகளில் இதுவரை 20,000-க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகளுககு 15 வகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது

## சேலம் மாவட்டத்தில் பயனடைந்தோர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

சேலம்,டிச.07-

முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராகக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் "நான் முதல்வன்" திட்டத்தினை கடந்த 01.03.2022 அன்று தொடங்கி வைத்தார்கள். சேலம் மாவட்டத்தில் "நான் முதல்வன்" எனும் இத்திட்டத்திற்கு இளைஞர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

சேலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் "நான் முதல்வன்" திட்டம் குறித்து மாவட்ட கலெக்டர்.செ. கார்மேகம், தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் 19 அரசு / தனியார் பொறியியல் கல்லூரிகளில் இதுவரை 20,000-க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகளுக்கு திறன் பயிற்சி சார்ந்த 15 வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மாணவர்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

"நான் முதல்வன்" திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தில் தமிழக இளைஞர்கள் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்திற்கேற்ப தனித்திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் இலவச திறன் பயிற்சிகள், குறைவான கட்டணத்துடன் கூடிய திறன் பயிற்சிகள், பாடத்திட்டத்துடன் கூடிய திறன் பயிற்சிகள் மற்றும் பாடத்திட்டத்துடன் இணைக்கப்படவுள்ள திறனெய்தும் தொழில் நுட்ப பாடங்கள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள், ஆங்கிலம், ஜப்பானிய, ஜெர்மன் மொழித் திறன் பயிற்சிகள், ஆளுமைத்திறன் பயிற்சிகள், உயர் கல்விக்கான நுழைவுத் தேர்வு பயிற்சிகள் என அனைத்தும் "நான் முதல்வன்" இணையதளத்தின் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆண்டுக்கு 10 இலட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி வழங்குவது "நான் முதல்வன்" திட்டத்தின் முக்கிய நோக்கம்





ஆகும். இதன்மூலம் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி இளைஞர்கள் நவீன தொழில் நுட்பங்களில் விருப்பத்திற்கேற்ற வேலைவாய்ப்பினை பெறும் வகையிலான குறுகிய கால பயிற்சிகளை தெரிவு செய்து உலகத்தரத்திலான பயிற்சிகளையும் அதற்குரிய சான்றிதழ்களையும் பெறலாம். இதற்கான இலவச படிப்புகள், குறைவான கட்டணத்துடன் கூடிய படிப்புகள் மற்றும் பாடத்திட்டத்துடன் கூடிய படிப்புகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதுதவிர, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இளைஞர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தவும், மாநிலத்தை இந்தியாவின் திறன் மையமாக மாற்றவும் தேவை அடிப்படையிலான மற்றும் தொழில் சார்ந்த திறன்களை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டு பல்வேறு குறுகிய கால திறன்மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் மாவட்டம் முழுவதும் 20 இடங்களில் அமைந்துள்ள திறன் பயிற்சி நிலையங்களில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனப் பராமரிப்பு, ஆட்டோமோட்டிவ் சர்வீஸ் டெக்னிஷியன், சரக்கு கண்காணிப்பு நிர்வாகி, ஒப்பனைக் கலைஞர், சுய தொழில் தையல்காரர், CCTV இன்ஸ்டாலேஷன், நுண்ணீர் பாசன தொழில்நுட்ப வல்லுநர் மற்றும் இயந்திர பராமரிப்பு உள்ளிட்ட 18 வகையான திறன் பயிற்சி சார்ந்த குறுகிய கால பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திறன் பயிற்சி நிலையங்கள் மூலம் மாவட்டத்தில் இதுவரை 2200 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களில் 750 பயிற்சியாளர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விவரங்களுக்கு www.tnskill.tn.gov.in என்ற இணையதளத்திலோ அல்லது மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகம், சேலம்-7 அலுவலகத்தினை நேரிலோ அல்லது 9499055827 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், சேலம் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று உலகளாவிலான திறன் பயிற்சிப் போட்டியில் விருது பெற்ற சேலம் மாவட்டம், நரசோதிப்பட்டியைச் சேர்ந்த மாணவி பி.வி.சரஸ்வதி தெரிவித்ததாவது:

எனது பி.வி. சரஸ்வதி. நான் சேலம் மாவட்டம், நரசோதிப்பட்டியில் எனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறேன். நான் தனியார் பொறியியல் கல்லூரியில் பயோ மெடிக்கல் பிரிவில் நான்காம் ஆண்டு பட்டம் பயின்று வருகிறேன். எனது தந்தை கட்டுமானத் தொழில் செய்து வருகிறார்.

எனக்கு திறன் மேம்பாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் உண்டு. உலக அளவில் நடைபெறும் திறன் மேம்பாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் படித்து வந்தேன். இதற்கான போதிய பயிற்சிகள் பெற உரிய திறன் மேம்பாட்டு நிறுவனங்களைத் தேடி வந்தேன். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னைப் போன்ற திறன் பயிற்சி பெற விரும்பும் மாணவ, மாணவியர்களுக்காக மாவட்ட மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தேர்வு செய்து பயிற்சிகள் வழங்குவதை அறிந்து விண்ணப்பித்தேன்.

மாவட்ட அளவிலான திறன் பயிற்சிக்கு என்னைத் தேர்வு செய்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் எனக்கு 3 மாதங்கள் செவிலியர் பணிக்கான முழுமையான பயிற்சியினை வழங்கினர். இப்பயிற்சியின் பலனாக நான் மாநில அளவிலான திறன் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற்று, புதுதில்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான திறன் பயிற்சித் தேர்விலும் வெற்றி பெற்றேன்.

பின்னர், கடந்த அக்டோபர் மாதம் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற உலகளவிலான திறன் மேம்பாட்டுப் போட்டியில் (செவிலியர் பிரிவு) கலந்துகொண்டு சிறப்பாக பயிற்சி பெற்றமைக்கான விருது வழங்கப்பட்டது. இதனால் எனது பணிக்கான மதிப்பு அதிகரித்துள்ள நிலையில் எனது எதிர்கால முன்னேற்றத்திற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சி மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது.

எனது ஆர்வத்திற்கும், தேடுதலுக்கும் உறுதுணையாக பல்வேறு பயிற்சிகளை எனக்கு வழங்கிய திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும், இத்திறன் மேம்பாட்டுக் கழகத்தினை சிறப்புர நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திறன் பயிற்சிப் போட்டியில் பிரான்ஸ் நாட்டில் விருது பெற்ற மாணவி பி.வி. சரஸ்வதி மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், சேலம் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற சேலம் மாவட்டம், நாழிக்கல்பட்டியைச் சேர்ந்த கே.பவித்ரா தெரிவித்ததாவது:

எனது பெயர் கே.பவித்ரா. நான் சேலம் மாவட்டம், நாழிக்கல்பட்டியில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். எனது தந்தை விவசாயம் செய்து வருகிறார். நான் இயற்பியல் பிரிவில் இளங்கலைப் பட்டமும், இளங்கலை கல்வியியல் பட்டமும் பெற்றுள்ளேன். கணினி தொடர்பான பணிகளில் எனக்கு அதிக ஆர்வம் இருந்ததால் கணினி தொடர்பான பணிகளையே தேடி வந்தேன். அதற்கு போதிய பயிற்சிகள் பெற விரும்பினேன்.

அவ்வாறான சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதை அறிந்தேன். சேலம் மாவட்ட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் கணினி தொடர்பான பயிற்சிளைப் பெற விண்ணப்பித்தேன். அதன்படி, 2 மாத காலம் ஆட்டோ கேட், போட்டோஷாப், கோரல் டிரா, டேலி, எம் எஸ் ஆபீஸ் உள்ளிட்ட கணினி செயல்பாடுகளை உள்ளடக்கிய பயிற்சிகளும், ஆளுமைத் திறன் மேம்பாடு, கம்யூனிகேசன் பயிற்சிகள் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அடுத்தடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்றும் நேர்முகத் தேர்வுக்கு தயாராவது குறித்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சிகளின் பலனாக எனக்கு தற்போது தனியார் நிறுவனத்தில் கணினி மேற்பார்வையாளராக பணி கிடைத்துள்ளது. இதன்மூலம் எனக்கு தொடக்கத்தில் மாத சம்பளமாக ரூ.15,000/- வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

நான் முழு மன திருப்தியுடன் இப்பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறேன். எவ்வித பயிற்



சிக் கட்டணமும் இல்லாமல் எனக்குத் தேவையான அனைத்து பயிற்சிகளையும் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கினர். குறிப்பாக, என்னைப்போன்ற மாணவியர்களின் தனித்திறமைகளை அடையாளம் கண்டு மென்மேலும் ஊக்குவிக்கும் வகையிலான இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பயிற்சி பெற்ற கே.பவித்ரா மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தனிமனித திறமையை அடையாளம் கண்டு இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கி, அவர்களின் வேலைபெறும் திறனை அதிகரிப்பதோடு, பணி வழங்கும் நிறுவனங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதன் வாயிலாக திறன்மிகு மையமாக தமிழகத்தை உருவாக்கும் உன்னத நோக்கத்துடன் பல்வேறு தொலைநோக்கு முன்னோடித் திட்டங்களை பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகச் செயல்படுத்தி இளைஞர்களை வெற்றிப்பாதைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைத்துச் செல்வது அவரது நிர்வாகத் திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

**தொகுப்பு:-**

**செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்**

**சேலம் மாவட்டம்.**

# அம்பேத்கர் நினைவு நாள் அனுசரிப்பு

**தர்மபுரி**

தர்மபுரியில் அம்பேத்கரின் 66-வது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது இதையொட்டி அவரது உருவ சிலைக்கு பல்வேறு கட்சியினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அம்பேத்கர் நினைவு நாள் சட்ட மேதை அம்பேத்கரின் 66-வது நினைவு நாள் தர்மபுரியில் நேற்று பல்வேறு கட்சிகளின் சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி தர்மபுரி கோல்டன் தெருவில் உள்ள அம்பேத்கர் சிலை மற்றும் அரசு மருத்துவ மனை அருகில் உள்ள அம்பேத்கர் சிலைகளுக்கு பல்வேறு கட்சியினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## காணவில்லை

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், மல்லமூப்பன்பட்டி கிராமம், மாரியம்மன் கோவில் அருகில், கக்கன் காலனி, க.எண்.3/49பி - ல் வசிக்கும் லேட். இடும்பன் மகன் இ.பழனிவேல், இந்து, வயது 70, ஆகிய நான் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவது என்னவென்றால்,எனது பெயரில் இருக்கும் மல்லமூப்பன்பட்டி கிராம நத்தம் சர்வே எண்.**97** க்கு சம்மந்தப்பட்ட **1877** சதுரடி வீடு மற்றும் காலி மனை நிலபாகபாத்தியம் விடுதலைபத்திரம் அசல் பத்திரம் எண். **2980/1996** சூரமங்கலம் சார்பதிவாளர் அலுலகத்திற்கு **23.11.2022** ம் தேதி காலை 11.00 மணிக்கு இரும்பாலை மருத்துவ மனைக்கு சென்றுவிட்டு வரும் வழியில் கணபதிபாளையத்தில் என் நண்பரிடம் விற்பனைக்கு காண்பித்துவிட்டு வந்து பார்த்த போது இருசக்கரவாகனத்தில் வைத்திருந்த அசல் ஆவணம் காணவில்லை. அசல் ஆவணத்தை கண்டு எடுத்தவர்கள் கீழ்கண்ட முவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு:
இ.பழனிவேல், த/பெ.இடும்பன்
க.எண். 3/49பி, கக்கன் காலனி,
மல்லமூப்பன்பட்டி, சேலம் மாவட்டம்.

## பொது அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராமம், ராஜ வீதி, க.எண்.46 - ல் வசிக்கும் பழனியப்பன் என்பவரின் மகன் பாலமுருகன் அவர்களின் தகவல் பெற்று அவரது வழக்கறிஞர் T.ரமேஷ், B.A.,B.L., ஆகிய நான் பொதுமக்களுக்கு கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்கரருக்கு சொந்தமான சொத்து கிரய பத்திரம் **03.10.2011** ம் ஆண்டு பள்ளிபாளையம் சார்பதிவாளர் அலுலகத்தில் பதிவான 1 ம் புத்தகம் ஆவண எண். **2784/2011** ல் பதிவு பெற்றது. மேற்படி கடந்த **01.12.2022** ம் அசல் கிரய பத்திரத்தை ஒரு வெள்ளைபையில் கட்சிக்காரரின் அக்ரஹாரம் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரில் வைத்து எடுத்துவரும் வழியில் அசல் கிரயபத்திரத்தை காணவில்லை. அக்கம் பக்கம் தேடியும் கிடைக்கவில்லை. மேற்படி அசல் கிரய பத்திரத்தை யாரேனும் எடுத்திருந்தால் மேற்கண்ட எனது கட்சிக்காரர் விலாசத்திற்கோ அல்லது கீழ்காணும் எனது விலாசத்திற்கோ தெரியப்படுத்துமாறு இதனால் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தபடுகிறது.

இப்படிக்கு: T.ரமேஷ்,B.A.,B.L., வழக்கறிஞர்,
நகராட்சி அலுவலகம் அருகில், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம்.

## ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **P.Srinivasan S/o. Pandiyan, Aged of 34 Years Permanently Residing at : D.No. 1/95-1, Thimirikottai, Pachanampatty (Po), Omalur (Tk), Salem (DT), Tamilnadu - 636 455.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**P.SRINIVASAN**

## அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

சேலம் மாவட்டம், சேலம் டவுன், குகை, புலிகுத்தி கிழக்கு தெரு எண்.5, க.எண். 21/10 என்ற முகவரியில் வசித்து வரும் மாதேஸ்வரன் த/பெ. சங்கர ஆச்சாரி அவர்களின் மகன் ஆதார் எண். **712129693310** சுமார் 65 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் சேலம் மாவட்டம், ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவண எண். **753/1979** தேதி **13.01.2022** தொலைந்துவிட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது **9976160284** கைப்பேசி எண்ணிற்க்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு: மாதேஸ்வரன், (வயது 65),
த/பெ. சங்கர ஆச்சாரி,
க.எண். 21/10, புலிக்குத்தி கிழக்கு தெரு
எண்.5, குகை, சேலம்- 636 006.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### சேலம் வணிகவியல் சார்பு நீதிமன்றம்
### C.O.S.No. 157/2022

கனரா வங்கி லிமிடேட்,
சேலம் அழகாபுரம் கிளையின்
சார்பாக அதன் கிளை மேலாளர்,
சேலம் மாவட்டம்.
...வாதி

/ எதிராக /

பிரபாகரன், த/பெ. சண்முகம்,
க.எண். 61/18, நாகப்பன் தெரு,
தாதகாப்பட்டி, சேலம் - 636006.
...பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வாதி மேற்படி கோர்ட்டில் மேற்படி எண்ணில் பிரதிவாதி வாதி வங்கியிடம் இருந்து வாங்கிய கடனை மேற்படி பிரதிவாதி உரிய காலத்தில் திரும்ப வசூல் செய்வதற்காக வாதி வங்கியின் தரப்பில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது வருகின்ற **19.12.2022** ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதி ஆகிய நீங்கள் அன்று காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராக தவறினால் உங்கள் அனைவருக்கும் எதிராக மேற்படி தாவா ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம்அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

R.சீனிவாசன்,B.A.,L.L.B.,
வழக்கறிஞர்,சேலம்.

### சேலம் பிரதம மாவட்ட நீதிமன்றம்
### T.R.O.P.No. 168/2022

1. ஜோதி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி,
அதன் தாளாளர் M.S.ரவிகுமார்
2. ஜோதி எஜிகேசனல் டிரஸ்ட்,
அதன் டிரஸ்டி M.S.ரவிகுமார்
3. M.S.ரவிகுமார்
4. M.S.விஜயகுமார்
...மனுதாரர்கள்

/ Vs /

M.S.சிவகுமார்,
த/பெ.லேட்.சிவபிரகாசம்,
பிளாட் நெ. 104, பேஸ் -2,
எஸ்.கே.சிட்டி, தாசநாயக்கன்பட்டி,
சேலம் - 636 201.
...1 ம் எதிர்மனுதாரர்

1 ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு

மனுதாரர்கள் 1 ம் எதிர்மனுதாரர் மற்றும் பலர் மீது மேற்படி மனுதாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக **21.12.2022** -ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது.அன்று நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால்மேற்படிவழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம்தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

S.S.விஜயராகவன்,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

### சேலம் மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றம்
### A.S.No. 40/2021

பிரித்திவிராஜன்
...மேல்முறையீட்டாளர்

/ Vs /

வெங்கடேஸ்வரன்
த/பெ. லேட்.சித்தையன்,
3, கிழக்கு தெரு, ஜான்சன்பேட்டை,
சேலம் -636 007.
...12 ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு உனது ஆஜருக்காக வரும் **14.12.2022** -ம் தேதி அன்று மேற்படி நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது.எனவே அன்று காலை 10.00 மணிக்கு நீர் தவறாமல் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உமது தரப்பு ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் உன்மீது மேற்படி மேல்முறையீடு குறித்து ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

S.ராஜாராம்,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

### IN THE COURT OF THE HONBLE Ist ADDITIONAL SUB JUDGE OF SALEM.
### I.A.No. 1/2022 in HMOP No. 36/2022

**V.P.Navaneeth,**
S/o. Paneerselvam,
Residing at Seshanchavadi village and Post, Valapadi (TK), Salem District.
...Petitioner/Petitioner

/ Vs /

**M.Peiyanka,**
D/o. G.Madhavan
Residing at Seshanchavadi village and Post, Valapadi (TK), Salem District.
...Respondent/Respondent

எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர் நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி நெம்பரில் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யும் மனுவை வருகின்ற **04.01.2023** -ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. தவறும்பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்ப்பாகும் என்பதை இதன் மூலம்அறியவும்.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

B.மங்கை,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

### சேலம் முதன்மை மாவட்ட நீதிமன்றம் முன்பாக
### I.A.No. 3/2022 in POP No. /2022

1. மாரியம்மாள் (இறந்தார்)
2. சுமதி
அவ்வையார் நகர் மெயின் ரோடு,
அம்மாபாளையம், சேலம் -302.
...மனுதாரர்கள்

/ Vs /

1. தனலட்சுமி, க/பெ. ஜெயபிரகாஷ்
த/பெ. குணசேகரன்
2.லோகாம்பாள்,த/பெ.குணசேகரன்
3. திவ்யா, த/பெ. குணசேகரன்
4. யுவராணி, த/பெ. குணசேகரன்
அனைவரின் வசிப்பிடம்: க.எண்.46/19,
அன்னதானப்பட்டி மெயின் ரோடு,
அன்தானப்பட்டி, சேலம் -2.
...எதிர்மனுதாரர்கள் 5 முதல் 8

5 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்ற அறிவிப்பு

மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மற்றும் பலர் மீது மேற்படி மனு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக **20.12.2022** -ம் தேதி அன்று காலை 10.00 மணிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

S.S.விஜயராகவன்,
B.மோகன்,
வழக்கறிஞர்கள்,சேலம்.

### மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சேலம்.
### சி.ப.எண்.302/2022/அ5

M.ரவி, த/பெ.லேட்.மாரிமுத்து,
க.எண்.18/5, எம்.ஜி.ஆர்.நகர்,
சின்னகொல்லப்பட்டி, சேலம்-8.
சேலம் மாவட்டம்.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்,
சேலம் அலுவலகம்.
2. திரு.மாநகராட்சி ஆணையாளர்
அவர்கள், சேலம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் அங்கம்மாள், க/பெ.லேட்.மாரிமுத்து, என்பவர் கடந்த **24.12.2020** ம் தேதியன்று சேலம் வட்டம், சின்னகொல்லப்பட்டி, எம்.ஜி.ஆர்.நகர், க.எண். 18/5 என்ற முகவரியில் இறந்துள்ளதை பிறப்பு / இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறிவிட்டார் தற்போது இறப்பு சான்றிதழ் வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ் விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம்அறிவிக்கப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

M.ரவி, மனுதாரர்,
சின்னகொல்லப்பட்டி, சேலம்-8.

### மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சேலம்.
### சி.ப.எண்.133/2022/அ5

செல்வம், த/பெ. பழனிசாமி,
க.எண். 250/1, மோட்டூர் காலரனி,
வீராணம் கிராமம்,
வலசையூர் குறுவட்டம்,
சேலம் - 636 122.
...மனுதாரர்

/ Vs /

1. திரு.வட்டாட்சியர் அவர்கள்,
சேலம் அலுவலகம்.
2. திரு. பிறப்பு/இறப்பு அலுவலர்
அவர்கள், சேலம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகள் S.கனிஷ்கா, த/பெ. செல்வம் என்பவர் கடந்த **20.03.2020** ம் தேதியன்று சேலம் மாவட்டம், சேலம் டவுன், 2வது அக்ரஹாரம், க.எண்.248/122-ல் உள்ள செல்வி மருத்துவமனை என்ற முகவரியில் பிறந்துள்ளதை பிறப்பு / இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறிவிட்டார் தற்போது எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ் விளம்பரம் செய்த 7 தினங்களுக்குள்ளாக மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

செல்வம், த/பெ. பழனிசாமி, மனுதாரர்,
வலசையூர் குறுவட்டம்,சேலம் - 122.

# ஈரோட்டில் கிறிஸ்துமஸ் விழா: அமைச்சர் சு.முத்துசாமி,செஞ்சி கே.மஸ்தான் பங்கேற்பு

ஈரோடு: டிச.07-

ஈரோட்டில் கிறிஸ்துமஸ் விழாநேற்று நடைபெற்றது. இந்த விழாவில் அமைச்சர் சு.முத்துசாமி, செஞ்சி கே. மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவி களை வழங்கி சிறப்புரை யாற்றினார்கள்.

சர்வதேச கிறிஸ்தவ ஊழி யர் கூட்டமைப்பு மற்றும் ஈரோடு மாவட்ட அனைத்து திருச்சபைகளும் இணைந்து மாபெரும் கிறிஸ்மஸ் விழா ஈரோடு கொல்லம்பாளை யம் நாடார்மேட்டில் உள்ள பெத்தானியா திருச்சபை தேவாலயத்தில் நடைபெற் றது. இவ்விழாவிற்கு சர்வ தேச கிறிஸ்தவ ஊழியர்கள் கூட்டமைப்பின் தேசிய தலைவரும், ஈரோடு பெத்தா னியா பெல்லோஷிப் தேவா லய பேராயர் ஜென்ஷன்ஜெ பராஜ் தலைமை வகித்தார். பிஷப் டாக்டர் கே.மேஷாக் ராஜா கிறிஸ்மஸ் சிறப்புரை யாற்றினார். தேசிய சட்டத் துறை செயலாளர் பால் விக் டர் பேரமைப்பு பற்றிய சிறப்புரை ஆற்றினார். இந்நி கழ்ச்சியில் சிறப்பு விருந்தி னர்களாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு சிறு பான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை



அமைச்சர் செஞ்சி கே.மஸ் தான் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவி களை வழங்கி சிறப்புரை யாற்றினர்.அமைச்சர்களிடம் சர்வதேச கிறிஸ்தவ ஊழியர் கள் கூட்டமைப்பு சார்பில் மனு கொடுக்கப்பட்டது.அம் மனுவில் கூறியுள்ளதாவது:

திருச்சபை கட்டுமான பணிகளுக்கு அனுமதி கோரி உள்ள சபைகளுக்கு அனுமதி வழங்கி பாதுகாப்பு வழங் கிட வேண்டும். மதத் தலை வர்கள் புனித தலமான எரு சேலம் சென்று வர தமிழக அரசு வழங்கி வரும் மானிய நிதியில் இருந்து மேலும் நிதியை உயர்த்தி வழங்க வேண்டும். கிறிஸ்துவ ஊழி யர்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் வருகின்ற அச்சுறுத்தலுக்கு நடவ டிக்கை மேற்கொண்டு பாது காப்பு வழங்கிட வேண்டும். கிறிஸ்தவ கல்லறை இடங் களை பாதுகாத்திடவும் கல் லறை இல்லாத இடங்களில் தமிழக அரசு இடம் ஒதுக்கி கிறிஸ்துவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறை வேற்றி தர வேண்டும். தமி ழக அரசு சிறுபான்மை மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கி இருக்கின்ற கல்வி உதவி தொகை உயர்த்தி வழங்கிட வேண்டும்.கிறிஸ் தவ வழிபாடு தலங்களுக்கு புனரமைப்பு நிதி அனைத்து கிறிஸ்தவ திருச்சபைகளுக் கும் சில விதிமுறைகளை தளர்த்தி வழங்கும் படி கேட் டுக் கொள்ளப்படுகிறது. சிறு பான்மையினர் நடத்திவரும் பள்ளிகளில் மத்திய அரசு வழங்கி வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது.மேலும் அத்தொகை மீண்டும் கிடைத் திட தமிழக அரசு நடவ டிக்கை மேற்கொள்ள வேண் டும்.உள்ளிட்ட கோரிக்கை களை முன்வைத்து மனுவை கொடுத்தனர். சிறப்பு விருந்தி னர்களாக கிழக்கு தொகுதி எம்எல்ஏ திருமகன் ஈவேரா, ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம், துணை மேயர் செல்வராஜ் ஈரோடு திமுக மாநகர செயலாளர் சுப்ரமணி யன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரகாஷ், திமுக பொருளாளர் பி. கே .ப ழனிச்சாமிஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப் பாளர்களாக பர்ண பாஸ்,பீட் டர், ஆபிரகாம்,ஜீவானந்தம், மானசே, யுவராஜ், பெஞ்ச மின், ஜாஸ்வா ஸ்டீபன், ஜான் சன் சார்லஸ், எசேக்கியால், எட்வின் ராஜ், ஆரோக்கிய சாமி, ஆபிரகாம், பிலிப், அன் புநாதன், டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் நிகழ்ச்சியை கூட்டமைப்பின் தேசிய தலைவர் ஜென்ஷன் ஜெபராஜ் தலைமையில் டேவிட் குணா, ரமேஷ் டேனியல், சந்தோஷ்காந்தி, சுதாகர், ஈரோடு மாவட்ட பொறுப்பாளர்கள் பிரின்ஸ், ஜேம்ஸ், சரவணன் லாரன்ஸ், ஆகியோர் ஏற்பாடுகளை செய்து இருந்தனர். இந்த விழாவில் ஈரோடு மாவட்டத் தில் உள்ள அனைத்து திருச் சபை பேராயர்கள் மற்றும் உறுப்பினர்கள் என அனைவ ரும் கலந்துகொண்டனர்.நி கழ்ச்சியின் தொடக்கத்தில் சுமார் 10 கிலோ எடை கொண்ட கிறிஸ்மஸ் கேக் கினை அமைச்சர்கள் வெட்டி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

ஈரோடு மாவட்டம்

# பவானி சாகரில் ரூ.21 கோடி மதிப்பீட்டில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டு வரும் தொகுப்பு வீடுகள்

## அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நேரில் ஆய்வு



ஈரோடு,டிச.07-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கி ணங்க, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ். மஸ்தான் ஈரோடு மாவட் டம், பவானி சாகரில் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் இலங் கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டு வரும் தொகுப்பு வீடுகளை நேரில் சென்று பார்வை யிட்டு, ஆய்வு செய்தார்.

ஈரோடு மாவட்டம், சத்தி யமங்கலம் வட்டம், பவானி சாகரில் ஊரக வளர்ச்சி மற் றும் ஊராட்சித்துறையின் சார் பில் இலங்கைத் தமிழர்களுக் கான மறுவாழ்வு முகாமில் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தொகுப்பு வீடுகளை கலெக் டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி முன்னிலையில் சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ் சி.கே.எஸ்.மஸ்தான் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய் தார். இந்த ஆய்வின்போது சிறுபான்மையினர் நலன் மற் றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ் சி.கே.எஸ்.மஸ்தான் தெரிவித் ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற பல்வேறு திட் டங்களை அறிவித்து, சிறப் பாக செயல்படுத்தி வருகி றார்கள். குறிப்பாக இந்தியா வில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சிறுபான் மையினர் மக்களுக்கான எண் ணற்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது. மேலும் தமிழ்நாடு, முதலமைச்சராக இருந்த முத் தமிழறிஞர் டாக்டர் கலை ஞர் இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக அங் குள்ள தமிழர்களை காப்பாற் றும் வகையில் தமிழகத்தில் 106 இடங்களில் இலங்கைத் தமிழர்களுக்காக முகாம் களை அமைத்து அவர்களுக் கான பாதுகாப்பான நிலை யை உருவாக்கினார்கள். அதன் தெடர்;ச்சியாக தமிழ் நாடு முதலமைச்சர் சட்டமன் றத்தில் இலங்கைத் தமிழர்க ளின் பாதுகாப்பு கருதி அவர் களின் அடிப்படை தேவை யான அனைத்து வசதிகளு டன் தரமாக கட்டுவதற்காக ரூ.317.00 கோடியில் சுமார் 7000-த்திற்கும் மேற்பட்ட வீடுகளை கட்டுவதற்கு அறி வித்தார்கள். அதன்படி, முதற் கட்டமாக 3500 வீடுகள் கட்டு வதற்கு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு தமிழகம் முழுவதும் அதற்கான பணி கள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் 321 வீடுகள் 17.17 கோடி மதிப்பீட்டிலும், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் அடிப்படை தேவைக ளுக்காக ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற் கொள்ளப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன்படி இன்றைய தினம் ஈரோடு மாவட்டம் பவானி சாகரில் கட்டப்பட்டு வரும் தொகுப்பு வீடுகளை ஆய்வு மேற் கொள் ளப் பட் டது. மேலும் இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாம்களில் முதல் கட்டமாக 420 வீடுகள் 291.30 சதுர அடி கொண்ட 4 வீடுகள் கொண்டு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு வீடு ஒன்றுக்கு ரூ.5.00 லட்சம் வீதம் 105 தொகுப்பு வீடுகள் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் கட்டுமானப் பணி யினை விரைவாகவும், தரமா கவும் முடித்திட தொடர்பு டைய அலுவலர்களுக்கு அறி வு றுத் தப் பட் டுள் ளது மேலும், தமிழ்நாடு முதல மைச்சர் தமிழகத்தில் கூடுத லாக 3500 வீடுகள் கட்டுவ தற்கு அறிவுரை வழங்கியுள் ளார்கள், அதற்கான அடிப் படை பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இலங் கைத் தமிழர் நலன்கருதி மறு வாழ்வு முகாம்களில் வசிக் கும் மக்களுக்கு அனைத்து வசதிகளுடன் நிரந்தரமாக வீடுகள் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரு கிறது. ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் கட்டப்பட்டு வரும் வீடுகள் கலெக்டர் உள்ளிட்ட அனைத்துதுறை அலுவலர்கள் ஒன்றிணைந்து சிறப்புடன் தங்களது பணி யினை மேற்கொண்டு வரு கின்றனர், இதற்காக எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரி வித்தார். ஆய்வில் கூடுதல் ஆட்சியர் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) லி.மதுபாலன் அய லகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணைய ரக துணை இயக்குநர் ரமேஷ், தேர்வுநிலை கண்காணிப்பா ளர் புகழேந்தி, கண்காணிப் பாளர் அசோக், சத்தியமங்க லம் வட்டார வளர்ச்சி அலு வலர்கள், சத்தியமங்கலம் வருவாய் வட்டாட்சியர் மற் றும் அரசு அலுவலர்கள் உட் பட பலர் உடனிருந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் பதிவு செய்ய முதல் நிர்வாக குழு கூட்டம்

## கலெக்டர் சா.அம்ரித் தலைமையில் நடைபெற்றது

ஊட்டி,டிச.07-

நீலகிரி மாவட்ட ஆட்சி யர் அலுவலகத்தில், மீன்வ ளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், மீன் வளர்ப் போர் மேம்பாட்டு முகமை யில் பதிவு செய்ய முதல் நிர் வாக குழுக் கூட்டம் கலெக் டர் சா.அம்ரித் , தலைமை யில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணி (நீர்வள ஆதா ரத்துறை), தோட்டகலை மற் றும் மலைப்பயிர்கள்துறை, ஆதிதிராவிடர்; மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாவட்ட முன்னோடி வங்கி, மீன்வளத்துறை உதவி இயக் குநர்கள் ஆகியோர்களுடன் மாவட்டத்தில் மீன் வளத்து றையின் மூலம் செயல்படுத் தப்பட வேண்டிய திட்டங் கள் குறித்து, கலெக்டர் கேட் டறிந்தார். மேலும், மீன்வ ளம் மற்றும் மீனவர் நலத்து றையின் சார்பில், பயனாளி களை தேர்வு செய்து அத்திட் டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என கலெக்டர் மீன்வளத்துறை அலுவலர்க ளுக்கு அறிவுறுத்தினார்.



கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெயரா மன், மாவட்ட ஆதிதிராவி டர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சுகந்தி பரிம ளம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சத்திய ராஜா, வேளாண்மை இணை இயக்குநர் (கோவை) முத்து லட்சுமி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் தில்லைராஜன் (ப வானி சாகர் மண்டலம்), பவானி சாகர் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அருளழகன், உதவி இயக்கு நர் (உதகை) ஜோதி லட்சும ணன், மீன்வள ஆய்வாளர் பத்மஜா (கோவை), உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கூரபாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

# ஈரோட்டில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



ஈரோடு டிச.07-

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார் பில் ஈரோடு கருங்கல்பாளை யம் காந்தி சிலை அருகே, நேற்று ஈரோடு கிழக்கு - மேற்கு மாவட்ட நிர்வாகி கள் சார்பில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈரோடு கிழக்கு மாவட்ட தலைவர் சித்திக் தலைமை யில், தமுமுகவின் மாநில செயலாளர் அல்தாப் அஹ மத், மாநில செயற்குழு உறுப்பினர் முகமது ரிஸ் வான், தலைமை கழக பேச் சாளர் அஜ்மத் அலிகான் உள் ளிட்ட பங்கேற்று கண்டன உரை யாற் றி னர், மேற்கு மாவட்ட தலைவர் என்.எஸ் சம்சுதீன், ஈரோடு மண்டல ஜமாத்துல் உலமாக்கள் சபை யின் செயலாளர் சாதிக் பாஷா, தமிழ்நாடு மக்கள் உரிமைகள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் கன. குறிஞ்சி, ஈரோடு கிழக்கு மாவட்ட செயலாளர் முக மது லரிப் உள்ளிட்ட நிர்வா கிகள் மற்றும் பெண்கள் உட் பட300க்கும் மேற்பட்டதமு முகவினர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு அவல்பூந்துறை ராட்டை சுற்றிபாளையம் பைரவர் கோவிலுக்கு யுனிக் புத்தக உலக சாதனை விருது



ஈரோடு, டிச.7

அ வல் பூந் து றை ராட்டை சுற்றிபாளையத் தில்பைர வர் கோவிலுக்கு யுனிக் புத்தக உலக சாதனை விருது வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம் அவல் பூந்துறை ராட்டை சுற்றிபா ளையத்தில் தென் னகத்து காசிக்கு இணை யாக அனு மன் நதி இடு காடு அருகே சொர்ண ஹர் ஷன பைரவர் கோவில் புதி தாக கட்டப் பட்டு வருகி றது. இந்த கோவி லின் கும் பாபிஷேகம் வருகிற மார்ச் மாதம் நடக்கிறது.

இக்கோவிலின் முகப்பு டி வாசலில் 39 அடி உயரம் உள்ள பைரவர் சிலை அமைக்.கப் பட் டுள் ளது. இந்தசிலையை பஞ்சாப் யுனிக் சாதனை புத்தகம் சார்பில் ஆய்வு செய்து உலக சாதனை விருதுக்கு தேர்வு செய்தனர்.

இதையடுத்து உலக சாதனை விருது வழங்கும் விழா கோவிலில்நடை பெற்றது. விழாவில் தமி ழக வீட்டு வசதித்துறை அமைச் சர்சு.முத்துசாமி, ஈரோடு எம். பி. கணேச மூர்த்தி, யுனிக் சாதனை புத் தகம் சார் பில்தென்னகபொ றுப்பாளர் ரஹ்மான் ஆகி யோர் கலந்து கொண்டு தென்னக காசி பைரவர் கோவிலுக்கான உலக சாதனை விருதை பைரவ பீடம் விஜய்சாமியி டம் வழங்கினார்கள்.

விழாவில் அமைச்சர் சு.முத் துசாமி பேசும் போது, இந்த கோவிலில் அமைக்கப்பட் டுள்ள உல கிலேயே பெரிய பைரவர் சிலை தமிழகத் துக்கே சிறப்பு சேர்க்கிறது. மிகப் பெரிய ஆன்மிக சுற்றுலா தலமாக இக்கோவில் விளங் கும். கும்பாபிஷே கத்துக்கு பிறகு இந்த கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்வார் கள்என்றார்

இந் நி கழ்ச் சி யில் ஈரோடு மேயர் நாகரத்தி னம், மொடக்குறிச்சி எம். எல்.ஏ. சரஸ்வதி, முன்னாள் எம்.எல்.ஏ. ஆர்.எம்.பழனிச் சாமி. அவல்பூந்துறை முன் னாள் பேரூராட்சி தலைவர் சு.குணசேகரன் மற்றும் பல் வேறு கட்சியைச் சேர்ந்த நிர் வாகிகள், பொதுமக்கள் பலர் நிகழ்ச்சியில் கலந் துகொண்டனர்

# தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் குறைதீர்ப்பு கூட்டம்: வரும் 12-ந் தேதி நடக்கிறது

ஊட்டி டிச.07-

நீலகிரி மாவட்டம் குன்னூர் பேரி பேங்க் பகுதியில் உள்ள தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்தில் 'நிதி ஆப்கே நிகட்' மற்றும் அக்டோபர் மாத குறைதீர்ப்பு கூட்டம் வருகிற 12-ந் தேதி (திங்கட்கிழமை) நடக்கிறது.

இதற்கு அமலாக்க பிரிவு அதிகாரி பத்மநாபன் தலைமை தாங்குகிறார். இதில் பி.எப்.சந்தாதாரர்கள் காலை 10 மணி முதல் மதியம் 11 மணி வரையும், தொழிலதிபர்கள் (விலக்கு அளிக்கப்பட்ட மற்றும் விலக்கு அளிக்கப்படாத நிறுவனங் கள்) மதியம் 11 மணி முதல் 12 மணி வரையும், ஓய்வூதியதா ரர்கள் மதியம் 12 முதல் 5 மணி வரையும் நடக்கும் கூட்டத் தில் கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் உறுப்பினர் கள், ஓய்வூதியதாரர்கள், தொழிலதிபர்கள் மற்றும் தொழிற் சங்க பிரதிநிதிகள் தங்களது குறைகள் குறித்த விவரங்களை do.coonoor@epfindia.gov.in என்ற இணையதள முகவரிக்கு நாளை மறுநாள் (வியாழக்கிழமைக்குள்) அனுப்ப வேண்டும். மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது பிரச்சி னைகளை தெரிவித்து தீர்வு காணலாம் . இவ்வாறு மாவட்ட அமலாக்க பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஊட்டியில் அம்பேத்கர் நினைவு தினம் அனுசரிப்பு



ஊட்டி டிச.7-

ஊட்டியில் அம்பேத்கர் நினைவு தினம் அனுசரிக்கப் பட்டது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை எழுதிய அம்பேத் கரின் நினைவு தினம் நேற்று நாடு முழுவதும் அனுசரிக் கப்பட்டது. இதன்படி நீல கிரி மாவட்டத்தில் ஊட்டியி லுள்ள நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு நீலகிரி மாவட்ட வக்கீல்கள் சங்க தலைவர் சந் திரபோஸ் தலைமை தாங்கி னார். மூத்த வக்கீல் நஞ்சுண் டன், அரசு வக்கீல்கள் ஆனந் தன், முகமது ஆகியோர் முன் னிலை வகித்தனர். இதில் வக்கீல் விஜயன், முனிரத்தி னம் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதேபோல் நீலகிரி மாவட்டத்தின் பல பல இடங்களிலும் நேற்று அம்பேத்கர் உருவப்படத் திற்கு மாலை அணிவித்து பல்வேறு அமைப்பினர் மரியாதை செலுத்தினர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

